செ. கு. எண்: 144 நாள்: 26.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.9.2016

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், சூரியமணல் மதுரா, கச்சிப்பெருமாள் என்ற இடத்தில் 25.9.2016 அன்று லாரியும், வேனும் மோதிய விபத்தில், வேனில் பயணம் செய்த கச்சிப்பெருமாள் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி திருமதி ராஜகுமாரி, திரு. மாசிலாமணி என்பவரின் மனைவி திருமதி முனியம்மாள், திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு. மருது பாண்டியன், திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி காசியம்மாள், திரு. பஞ்சநாதன் என்பவரின் மனைவி திருமதி காமாட்சி, திரு. சின்னப்பன் என்பவரின் மகன் திரு. மணிகண்டன், திரு. முருகையன் என்பவரின் மனைவி திருமதி ராணி, திரு. சேட்டு என்பவரின் மனைவி திருமதி சித்ரா, திரு. நடராஜன் என்பவரின் மனைவி திருமதி செந்தாமரை, திரு. ராஜமாணிக்கம் என்பவரின் மனைவி திருமதி சரஸ்வதி, திரு. தங்கதுரை என்பவரின் மனைவி திருமதி செல்வி, திரு. செல்வராசு என்பவரின் மனைவி திருமதி அன்னமயில், திரு. சாமிநாதன் என்பவரின் மனைவி திருமதி வளர்மதி மற்றும் திரு. அன்பழகன் என்பவரின் மனைவி திருமதி வாசுகி ஆகிய 14 நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் 11 நபர்கள் பலத்த காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும்,

தஞ்சாவூர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும், விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**